சார்பு நீதிமன்றம், திருவாரூர்.

முன்னிலை திரு.C.ராஜேஷ், B.A., B.L.,

சார்பு நீதிபதி, திருவாரூர்.

<u>அசல் வழக்கு எண்.117/2020</u>

10.08.2026

வா.சா.4 திரு.ராமமூர்த்தி

**<u>3,4 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

1. நான் மணவாளம்பேட்டை கிராமத்தில் வசித்து வருகிறேன். தாவா சொத்து யார் பெயரில் உள்ளது என்றால் வாதியின் தாயார் பெயரில் இருந்தது. அதை வாதிக்கு தெரியாமல் வாதியின் சகோதரிகள் எழுதிவாங்கிவிட்டனர். நாளது தேதியில் தாவா சொத்தின் உரிமையாளர்கள் வாதியின் சகோதரிகள் என்றால் சரிதான். வாதியின் சகோதரிகளுடன் எனக்கு பேச்சுவார்த்தை உண்டு. தாவா சொத்து சம்பந்தமாக சாட்சியமளிக்க வாதி அழைத்தார் என்றால் சரிதான். வாதி எனக்கு 50 ஆண்டுகளாக பழக்கம் என்றால் சரிதான்.

2. தாவா சொத்துக்களின் புல எண், விஸ்தீரணம் தெரியுமா என்றால் தெரியும். வாதி சொல்லிதான் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு பக்கத்து வயல் என்பதால் தெரியும். எனது வயலுக்கு அருகில் நிறைய நிலங்கள் உள்ளன. அனைத்து சொத்துக்களின் சர்வே எண்கள், விஸ்தீரணமும் தெரியுமா என்றால் தெரியாது. எனக்கு இதர சர்வே எண்கள் மற்றும் விஸ்தீரணம் தெரியாத நிலையில் வாதிக்கு ஆதரவாக சாட்சியம் சொல்லும் நோக்கில் தாவா சொத்தின் சர்வே எண், விஸ்தீரணம் தெரிந்து கொண்டேன் என்றால் சரியல்ல.

3. வாதி என்ன படித்துள்ளார் என்று எனக்கு தெரியாது. தாவா சொத்து நாளது தேதியில் பிரதிவாதிகளின் அனுபவத்தில் உள்ளது என்றால் சரியல்ல. தாவா சொத்துக்கள் பிரதிவாதிகளின் அனுபவத்தில் உள்ளது என்றும் ஆனால் வாதி எனக்கு வேண்டியவர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை - இல்லை**

Typed down to my dictation, In my presence and hearing and under my personnel direction and Superintendence and admitted by the witness to be Correct.

C RAJESH

Digitally signed by C RAJESH
Date: 2026.08.10 18:00:22 +0530

Subordinate Judge,
Tiruvarur.